


## தலைப்பு: பொன்னுலகம்

**வழங்கியோர்**

**பொன்னுலகம்**

இவர்கள்
வளர்ப்பு பிள்ளைகளா
இல்லை
செவிலி தாய்களா ?

தலைமுறை தலைமுறைகளாக
பாலூட்டி வளர்த்தார்கள்
அவர்கள் தலைமுறையே
இல்லை இப்பொழுது.

ஏனோ தெரியவில்லை
வெள்ளையாக துடிக்கும்
வெளிநாட்டு மோகம் போல்
இவர்க்களை அழித்து விட்டு
ஊசி போட்டு உருவாகும்
வெளிமாடுகளை நாடினோம்
இப்பொழுது ஊசி போட்டு கொண்டு
அலைகிறோம்.

மண் மாடு மனிதன் என்போம்
மண்ணை கெடுத்து விட்டான்
மாட்டை அழித்து விட்டான்
இரு கண்களை இழந்தவன்
சித்திரம் வரைவது போல்
ஏதோ பித்தன் போல்
பிதற்றி கொண்டுருக்கிறான்.

தின்று கொழுத்த
இவன் உடலில் இருந்தாவது
மண் செழிக்கட்டும்
மற்றோரு உயிரினம்
பல்கி பெருகட்டும்
மனிதனை மிஞ்சட்டும்.

- பிறை நிலவன்

**SivaKumar**

**முத்துக்காளை குடும்பம்**

வாயில்லா ஜீவனை பேர்சொல்லி அழைத்தால்
தாயுள்ளங் கொண்டு தலையாட்டும் அழகாய்
சேயான கன்றும் செல்லமாய் முட்டும்
ஓயாத அன்பை ஒய்யாரமாய் சொல்லும்......

மழை வந்துவிட்டால்
மாவென்று கத்தும்
அழைத்துள்ளேச் சென்றால் அமைதியைக் காக்கும்
தழைவெட்டிப் போட்டால் தள்ளியே நிற்கும்
குழைந்து கொடுத்தால் கொஞ்சியே கேட்கும்.....

பால்சுரக்கும் ஜீவன்களை பாசத்தோடு வளர்ப்பதுமே
தோள்கொடுத்த தோழனாய் காலையுந்தான்
கனிவுடனே
கால்கடுக்க
தெய்வங்களாய்
நாள்முழுதும்உழைத்திடுமே
வேல்முருகன் சாமியாக வாயில்லா கால்நடையே....

நான்வளர்க்கும் நாய்பூனை கோழிபுறா என்றிருந்தும்
நான்பின்னே நடந்துவர நல்வாழ்வு நமக்களித்த
என்சொத்து பத்தும்
சொந்தம் எல்லாம் கண்பட்டுங் கலங்கிடாமல்
காக்குமிந்த குலமிதுவே.....

அக்கம் பக்கம் சொந்தம் இருந்தும்
துக்கம் இல்லை இப்படத்தைத்
தொட்டிருந்தால்
நித்தம் எந்தன் தலைமுறையும் நினைவுகளாய்
தித்திக்குமே நீட்சியற்ற வாழ்விதுவே.....

எ.வெங்கடாசலபதி.

**தங்கத்தமிழன்**

காவியங்கள் கதை சொல்லும் என் தங்கத்தமிழனின் பெயரை..
உயிராக இருப்பவன் எந்த உயிரையும் மதிப்பவன்..
ஓவியமும் உயிரூட்டும் என் தமிழனின் சிகை பார்த்து..
மிருகங்களையும் தன் குழந்தைகளாக மதிக்க தெரிந்த ஒரே இனம்..
வாழும் நாட்களில் எந்த உயிருக்கும் தீங்கு நினைக்காத எம் தமிழனமே..
காற்றிலும்கூட மாசு இருக்கும் எந்தன் தமிழரின் மனதில் ஏதடா...
காலம் கடந்தாலும் தன் புகழை போற்றும் வகையில் வாழ்பவன் தமிழன்..
உலகத்தின் முதல் மொழி உலகின் மூத்த குடியினம் நாம் என்பதில் கர்வம் எனக்கு...
தன் குடும்ப புகைப்படத்தில் மிருகங்களையும் தன் குழந்தைகளாய் இடம்பெற செய்த மாசற்ற தமிழ் மக்களே..
" தமிழர் என்றொரு இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்ற நாமக்கல் கவிஞரின் வரிகளுக்கு ஏற்ப தமிழனுக்கு என்றொரு தனித்துவம் இருக்கிறது..
உயிரான என் தமிழ் ஓங்கி வளர்க தமிழனின் புகழ் வின்னை எட்டுக..
மொத்ததில் தமிழரின் குணத்துக்கு இணையான குணம் எங்கேயும் நான் கானேன்..

இரா.பாலமுருகன்

பொழில்-VIP-பொழில்-VIP-பொழில் வாழ்வியல் இலக்கியப் பொழில் - சிங்கப்பூர் LIFE LITERARY ASSOCIATION - SINGAPORE